<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 09.03.2026 , அ.வ.எண். 307/2016 வா.சா.2.மயில்சாமி, த/பெ. வேல்சாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வாதி முத்துவேல் என்னை தனிப்பட்ட முறையில் சாட்சியம் அளிப்பதற்கு அழைத்தாரா என்றால் இல்லை. முத்துவேல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளவிவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் முத்துவேல் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னதின் பேரில் எனக்கு தெரியவந்தது. என்ன பரிகாரம் கோரி முத்துவேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு விவரங்களே தெரியாமல் சாட்சியம் அளிக்கக்கூடிய எனது சாட்சியம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி